# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1789/18 - 2012 දෙසැම්බර් මස 18 වැනි අඟහරුවාදා - 2012.12.18

*1789/18 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை

*192 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்கள்*

*நாணய விதிச் சட்டத்தின் கீழ் (அத்தியாயம் 422) நிறுவப்பட்ட நாணயச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் தத்துவங்களின் பண்பால், 1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் 192 ஆம் பிரிவின் நியதிகளின்படி, நாணயச் சபையானது, வங்கி வட்டியின் நடைமுறை வீதங்களைக் கருத்திற் கொண்டு 2013, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் சட்ட வட்டி வீதமானது ஆண்டொன்றுக்கு எட்டு தசம் ஐந்து ஒன்பது (8.59%) சதவீதமாக இருத்தல் வேண்டுமெனத் தீர்மானித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,*
*நாணயச் சபையின் தலைவரும்*
*இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.*

*இலங்கை மத்திய வங்கி,*
*கொழும்பு,*
*2012, திசெம்பர் 12.*

*1- 64/1*

---

### கடன் அறவீட்டுச் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம்

*30 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்கள்*

*நாணய விதிச் சட்டத்தின் கீழ் (அத்தியாயம் 422) நிறுவப்பட்ட நாணயச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் தத்துவங்களின் பண்பால், 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடன் அறவீட்டு (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 30 ஆம் பிரிவின் நியதிகளின்படி, நாணயச் சபையானது, வங்கி வட்டியின் நடைமுறை வீதங்களைக் கருத்திற் கொண்டு 2013, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக சந்தை வட்டி வீதமானது ஆண்டொன்றுக்கு எட்டு தசம் ஐந்து ஒன்பது (8.59%) சதவீதமாக இருத்தல் வேண்டுமெனத் தீர்மானித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,*
*நாணயச் சபையின் தலைவரும்*
*இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்.*

*இலங்கை மத்திய வங்கி,*
*கொழும்பு,*
*2012, திசெம்பர் 12.*

*1- 64/2*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*